கல்முனை மாநகர சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கல்முனை மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்முனை மாநகர சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) மாநகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க என்னால் மேற்கொள்ளப்பட்ட 1.2(அ)(iii) மற்றும் (viii) இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் நீங்கலாக முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2022 ஆம் ஆண்டில் ஏலவிற்பனை செய்யப்பட்ட மூலதனப் பொருட்களின் கிரயப் பெறுமதி கணிக்கப்படாமல் ரூபா 200,420 விற்பனைப் பெறுமதியினை நிலையான சொத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது.	அதற்கான தகவல்களை கிடைக்கும் பட்சத்தில் எதிர்வரும் காலங்களில் கிரயப் பெறுமதியினை கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகளை சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் ஜனாதிபதி விஷேட செயற்திட்டத்தின் கீழ் ரூபா 4,806,654 க்கு மேற்கொள்ளப்பட்ட நற்பிட்டிமுனை சிறுவர் பூங்கா நிலையான சொத்துக் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	எதிர்வரும் நிதியாண்டில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்	மேற்படி
(இ)	நிலையான வைப்பு மற்றும் சேமிப்பு வைப்புக்கான மீளாய்வாண்டின் ரூபா 3,500,663 வட்டி வருமானம் சொத்துக்கணக்கில் சேர்க்கப்பட்டிருந்தது.	நிலையான சொத்தில் சேர்த்துக் காணப்படும் வட்டி வருமானம் காசுக் கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மேற்படி

1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2024 ஆம் ஆண்டிற்கான மாநகர சபையின் நிதிக்கூற்றின் படி ரூபா 635,312,683 கூட்டுப் பெறுமதியான 09 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் நிதியாண்டில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மிக விரைவாக தகவல்களைப் பெற்று உரிய ஏடுகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீளளிக்கத்தக்க வைப்புப்பண மீதியாக ரூபா 33,710,767 காணப்பட்டிருந்தது. இருப்பினும் இம் மீதி தொடர்பான விபரமான வகைப்படுத்தப்பட்ட பட்டியல் அதன் காலப்பகுப்பாய்வு என்பன பேணப்பட்டிருக்கவில்லை.	மீளளிக்கப்படத்த க்க வைப்புப் பணம் மீதியாக காட்டப்பட்ட தொகைக்கான விரிவான விபரம் அலுவலகத்தில் பேணப்படுகிறது.	வைப்பு நிலுவைகளை உறுதிப்படுத்தும் விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரை	சிபார்சு
மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், அத்தியாயம் 252			
(i) 155 பிரிவு	கல்முனை பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள 588 கடையறைகளுக்கு அறவிடப்படும் வாடகைத் தொகையினை காலத்திற்கு காலம் மதிப்பீடு செய்து வாடகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் காலங்களில் மதிப்பீடு செய்யப்பட்டு புதிதாக ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.	கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், கடையறைகளுக்கு அறவிடப்படும் வாடகைத் தொகையினை காலத்திற்கு காலம் மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii) 230 பிரிவு	மாநகர சபையின் அதிகாரப் பிரிவிலுள்ள அரச நிறுவனங்களின் கட்டிடங்கள் மற்றும் காணிகளினை வரி மதிப்பீட்டிற்குட்படுத்தப்பட்டு ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மதஸ்தானங்களைத் தவிர ஏனைய அனைத்து நிறுவனங்களும் மதிப்பீட்டிற்குட்படுத்த ப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் நிலுவைகள் அறஙவிட நடவடிக்கை எடுக்கப்படும்.	கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், அரச நிறுவனங்களின் கட்டிடங்கள் மற்றும் காணிகளினை வரி மதிப்பீட்டிற்குட்ப டுத்தப்பட்டு ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii) 247(இ) பிரிவு	சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் பிரிசித்த நொத்தாரிசு சேவைகள் மற்றும் வைத்திய சிகிச்சை நிலையங்களிடமிருந்து உயர் தொழில்கள் மீதான வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் காலங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.	கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் நிலையங்களிட மிருந்து உயர் தொழில்கள் மீதான வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
அரச நிதிப்பிரமாண இலக்கம் 571 (1),(2),(3) காலம் கடந்த வைப்புக்கள்	மீளாய்வாண்டின் இறுதியில் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 4,622,507 வைப்புக்கள் வருமானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் காலங்களில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்	அரச நிதிப்பிரமாணத் தின் பிரகாரம், வருமானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
09/2009 ஆம் இலக்க 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய அரச நிருவாக சுற்றறிக்கை பந்தி 2(iv)	ரூபா 331,756 விடுமுறை தினக் கொடுப்பனவு மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு விரல் அடையாள இயந்திரத்தின் அடிப்படையில் பரிசீலித்து வழங்கப்பட்டிருக்கவில்லை.	இனிவரும் காலங்களில் விரல் அடையாளம் பரசீலிழக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம், பரிசீலித்து கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய PT/03/2021 ஆம் இலக்க கிழக்கு மாகாண நிதிச் சுற்றறிக்கை	பணம், களஞ்சிய பொருட்கள், அரசிறை அறவீடுகள் மற்றும் காசோலையில் கையொப்பமிடல் போன்ற கடமைகளுக்கு பொறுப்பாக்கப்பட்ட 10	எதிர்வரும் காலங்களில் பாதுகாப்பு பிணைபெற நடவடிக்கை எடுக்கப்படும்	சுற்றறிக்கையின் பிரகாரம், உரிய உத்தியோகத்தரி டமிருந்து பாதுகாப்பு பிணையினை அறவிட

உத்தியோகத்தரிடமிருந்து ரூ. 107,500 பாதுகாப்பு பிணை மாநகர சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.		நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 54,384,690 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 57,284,725 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

		2024				2023			
	வருமான மூலம்	**மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்**	**பட்டியலிடப்பட்ட வருமானம்**	**சேகரிக்கப்பட்ட வருமானம்**	**திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை**	**மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்**	**பட்டியலிடப்பட்ட வருமானம்**	**சேகரிக்கப்பட்ட வருமானம்**	**திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை**
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	73,600,000	281,930,057	22,226,082	259,703,975	198,100,000	249,180,580	20,905,649	228,274,930
(ii)	வாடகை	48,945,000	98,713,230	30,893,656	67,819,574	35,325,000	85,384,959	23,774,376	61,610,583
(iii)	உத்தரவுப்பத்திரக் கட்டணம்	21,410,000	8,409,300	8,409,300	-	19,972,500	8,416,456	8,416,456	-
(iv)	ஏனைய வருமானம்	194,195,000	153,311,320	149,680,878	14,658,540	18,170,000	11,121,953	11,121,953	-
(v)	கூட்டுத் தொகை	**338,150,000**	**542,363,907**	**211,209,826**	**342,182,089**	**271,567,500**	**354,103,948**	**64,218,434**	**289,885,513**

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**சபையின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ)	சபையினால் ஆதனவரி தொடர்பாக ஆதன மதிப்பீடானது இற்றைப்படுத்தப்படாமல் 2012 ஆம் அடியாண்டை கொண்டிருந்தது. மேலும் ஆதன வரி அறவீட்டிற்காக சபையினால் குறைந்தளவான அறவீட்டு உத்தியோகத்தர்கள் பயன்படுத்தபடுகின்ற போதும் அவர்களுக்கு சேகரிப்பு இலக்கு மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவு மேற்கொள்ளப்படாததனால் பாரிய வருமான இழப்பு தொடர்ச்சியாக ஏற்படுகின்றது.	எதிர்வரும் காலங்களில் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மதிப்பீடு இற்றைப்படுத்தப்பட்டு வருமானத்தினை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	பொதுச்சந்தை கடையறை வளாக நிலப்பரப்பில் 11 பேர் தங்களது வியாபாரத்தினை நடாத்தி வருகின்ற போதும் சபையினால் அந்நிலப்பரபிற்கான உரிமம் மற்றும் இருப்பை உறுதி செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பான முறையான நடவடிக்கை எடுக்கப்படும்	குறித்த நிலப்பரப்பிற்கான உரிம்ம மற்றும் இருப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களில் குத்தகை பெறுமதியில் 80% அங்கீகரிக்கப்பட்ட வங்கி உத்தரவாதமாகவும் பெற்றுக்கொள்ளப்பட உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தும், அவ்வாறு செயற்படாமையினால் ரூபா 24,005,798 தொடர்ச்சியாக நிலுவையாக காணப்பட்டிருந்தது.	இவ்வாறான தவறுகள் எதிர்வரும் காலங்களில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்	நிலுவைகளை மிக விரைவாக அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2021 ஆம் ஆண்டு கல்முனை பொதுச்சந்தை மற்றும் மீன்சந்தை குத்தகைக்காக வழங்கப்பட்ட போலியான ரூபா 5,600,000 கூட்டுறவு கிராமியவங்கி பிணைமுறி தொடர்பாக இதுவரை சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது	வருமான அறவீட்டை செய்வதற்கு தடையாக இருந்த சகல தரப்பினர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	விலங்கறுமனை		
(i)	சபைக்கு சொந்தமான விலங்கறுமனைகள் இல்லாத காரணத்தினால் மீளாய்வாண்டில் மாத்திரம் 9,706 கால்நடைகள் தனியார் விலங்கறுமனையில் ரூபா 24,265,000 செலவில் அறுக்கப்பட்டதன் மூலம் சபைக்கான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	மாநகரசபைக்கு சொந்தமாக விலங்கறுமனை நிர்மானிக்க நடவடிக்கை எடுக்கப்படும்	விலங்கறுமனை நிலையமொன்றை அமைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 145(1) மற்றும் (2) இன் பிரகாரம், அங்கீகாரம் பெறப்படாத தனியார் இறைச்சிக் கடையினை இரத்து செய்ய சட்ட நடவடிக்கை எடுக்காததுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதிச் சான்றிதழ் பெறாமலும் காணப்பட்டிருந்தது.	தனியார் இறைச்சிக் கடைகள் இறத்துச்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ம.சு.அ சபையின் சான்றிதழ் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	உரிய அனுமதியை பெற்று விலங்கறுமனையை நடாத்துவதுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சான்றிதழை பெற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	தொலைத்தொடர்பு கோபுரத்திற்கான வாடகை		
	மாநகர சபை எல்லையினுள் 33 தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிறுவப்பட்ட போதிலும், கணக்காய்வு திகதி வரை சேவை வழங்குநர்களிடமிருந்து எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதனால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 200,000 வாடகை வருமானம் இழக்கப்படுகின்றது.	எதிர்வரும் காலங்களில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்	வருமானத்தினை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(எ) விளம்பர பலகைக் கட்டணம்

விளம்பரப் பலகைகளுக்கான விபரமான தனிப்பட்ட கணக்குகளின்படி ஒவ்வொரு ஆண்டிற்குமான நிலுவையாகவுள்ள தொகைகள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. மேலும் மாநகர சபையினால் அதன் நிர்வாக எல்லையில் காணப்படுகின்ற புதிய விளம்பரப் பலகைகள், ஏற்கனவே உள்ள பலகைகள் அல்லது கைவிடப்பட்ட பலகைகள் பற்றிய விபரங்கள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	பதிவேடுகள் பேணப்பட்டு முறைப்படி வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
கிழக்கு மாகாண உள்ளக கணக்காய்வு பிரிவின் கணக்காய்வு அறிக்கைக்கு இணங்க, மாநகர சபையினால் 2020 ஆம் ஆண்டில் 9 வகையான வருமான மூலங்களிலிருந்து அறவிடப்பட்டிருந்த அண்ணளவாக ரூபா 18,094,795 வைப்புச் செய்யப்படாமல் மோசடி செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், இது தொடர்பான தொடர் நடவடிக்கை மாநகர ஆணையாளரினால் கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மாநகர சபையில் நிதிப்பிரிவில் இடம் பெற்ற நிதி மோசடி தொடர்பாக கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் CIDயினரால் வழக்கு தொடரப்பட்டு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதனால், இது தொடர்பான நடவடிக்கைகள் நீதிமன்ற நடவடிக்கையினூடாக மேற்கொள்ளப்படும்.	மோசடிக்கு வழிவகுத்த தரப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து மேலும் நீதிமன்ற தீர்ப்பின் படி மேலும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	ஐந்து வருடங்களுக்கு மேலாக விளைவற்றுக் காணப்படும் ரூபா 3,729,844 கூட்டுப் பெறுமதிகளினைக் கொண்ட 04 வங்கி நடைமுறைக் கணக்கு மீதிகளினை வருமானம் உழைக்கும் மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	செயற்படாமல் நீண்டகாலம் காணப்படும் 04 வங்கி நடைமுறைக்கணக்கிலுள்ள மீதிகளை சபையின் பிரதான கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.	வருமானம் உழைக்கும் மூலகங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	சபையினால் பதவி நிலை உத்தியோகத்தர்களினால் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு எதுவித அரச இலட்சினை பொறிக்கப்படாமல் காணப்படுகின்றது. இதனால் வாகன துஸ்பிரயோகம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அவதானிக்கப்பட்டது.	தற்போது அரச இலட்சிணைகள் பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	அரச இலட்சிணைகள் பொறிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2023ம் ஆண்டு சபையின் சேவையினை இணையத்தினூடாக மேம்படுத்துவதற்காக ரூபா 150,000 க்கு நிறுவப்பட்ட "மங்கிவ்வா" எனும் மென்பொருள்செயலி (Software application) கணக்காய்வுத் திகதிவரை எதுவித இயக்கப்பாடின்றி காணப்படுகின்றது. அதேசமயம் மீளாய்வாண்டிலும் ரூபா 150,000 செலுத்தி புதுப்பிக்கப்பட்டிருந்தது.	இம் மென்பொருள் செயலி தொடர்பாக பொது மக்களுக்கு போதிய தெளிவின்மையினால் அவர்கள் நேரடியாக வந்தே எமது சேவையைப் பெற்றுக்கொள்கின்றனர். இதனால் இந்த செயலி பயன்படுத்தப்படவில்லை.	இச்செயலி (Software) தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டு அவர்கள் குறித்த சேவையினை பெற வழி ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

3.3 பயன்படுத்தப்படாத/ குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
சபையின் எல்லைக்குட்பட்ட பெரிய நீலாவணை பசளை உற்பத்தி நிலையத்தை விஸ்தரிக்கும் நோக்குடன் சேதனப் பசளை உற்பத்தி செய்யும் (அரைக்கும்) இயந்திரம் ரூபா 734,867 இல் 2022 யூன் 17 ஆந் திகதியன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தும், பயன்பாடுகளின்றி காணப்பட்டிருந்தது.	பயன்படுத்ததக்க வகையில் ஒழுங்குபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.	குறித்த இயந்திரத்தைப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்படும் காணிகள், கட்டிடங்கள் மற்றும் 91 வாகனங்களின் பெறுமதிகள் மீள்மதிப்பிடப்பட்டு அதன் உண்மைப்பெறுமதி (Fair Value) கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	தற்போது அனைத்திற்கும் பெறுமதிகள் மீள்மதிப்பீடு செய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.	மீள்மதிப்பிடப்பட்டு உண்மைப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபைக்கு சொந்தமான பாவிக்க முடியாத 14 வாகனங்கள் திருத்தம் செய்யவோ அல்லது ஏலவிற்பனை செய்யவோ நடவடிக்கை எடுக்கப்படாமல் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றன.	இவற்றிற்கு ஒரு தனியான குழு நியமிக்கப்பட்டு விசேட பொருட் கணிப்பீடு செய்துஅதனை திருத்துவது அல்லது விற்பனை செய்வது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.	குறித்த வாகனங்களை திருத்தம் செய்வதற்கு அல்லது ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	சபையினால் பராமரிக்கப்படுகின்ற 30 வாகனங்களின் உரிமைத்துவம் இதுவரை மாநகர சபைக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வாகன உரிமைமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.	வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	தேசிய பெறுகை வழிகாட்டியின் பிரிவு 4.2.1 இன் பிரகாரம் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் முறையான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	மாநகர சபைக்கு முறையான பெறுகைத்திட்ட மொன்று விரைவில் தயாரித்து சமர்ப்பிக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகைத்திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	முறையற்ற குளிரூட்டி கொள்வனவு		
	ரூபா 4,982,373 க்கு 18 (AC) குளிரூட்டிகள் Singer (PLC) விநியோகத்தரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் குறித்த கொள்வனவுக்கான பெறுகை நடைமுறை LDSP பெறுகை குழுவின் அனுமதியின்றி தீர்மானிக்கப்பட்டிருந்தது.	இக்குளிரூட்டிகள் கொள்வனவு தொடர்பாக பெறுகை குழு தீர்மானத்தில் சிக்கல்கள் காணப்பட்ட போதிலும் தற்போது அது சீர் செய்யப்பட்டுள்ளது.	பெறுகை நடைமுறையினை பின்பற்றி கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப் பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	கல்முனை கடற்கரைப் பூங்கா நிர்மாணம்		
(i)	Item 28 earth work – Back filling & compact இற்காக 15.20 Cu.m மதிப்பீடு செய்யப்பட்டிருப்பினும் 3.16 Cu.m மாத்திரம் நிறைவடைந்துள்ளது. இதனால் களவிஜயத்தின் போது நிலப்பரப்பு சமமற்றதாகவும் உரிய கொம்லெக்ஸன் (Compaction) இல்லாமலும் காணப்பட்டது.	மேற்பரப்பிற்கு கடல் மண் போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மண் கிடைக்காமையினால் மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	மதிப்பீட்டறிக்கைக்கு அமைய உரிய அளவுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) (i)	நற்பிட்டிமுனையில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவிற்காக roller இற்கான கொடுப்பனவாக ரூபா 766,244 (823Cu.m*924.30) வழங்கப்பட்டிருப்பினும் குறித்த மண்ணிடலானது Watering and Compact செய்யப்படாமல் காணப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.	பகுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது மண்ணுடைய Compaction கழித்தே உரிய கொடுப்பனவு வங்கப்பட்டுள்ளது.	மேற்படி
(ii)	BOQ Item No: 02 and No: 03 supply and fixing play equipment இற்காக ரூபா 1,943,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் குறித்த உபகரணங்கள் பொதுமக்களினால் தரமற்றதாக நிராகரிக்கப்பட்டதற்கான தீர்வின்றி அருகிலுள்ள பாடசாலை வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தது.	விளையாட்டு உபகரணங்கள் 30வருட அனுபவமுள்ள நிறுவனத்தில் 03 வருடகால உத்தரவாதத்துடன் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.	தரமானதும் நீண்டகாலம் பாவிக்கக்கூடியதுமான பொருட்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	சபையில் பிரதான பதவியணிகளான ஆணையாளர், வைத்திய அதிகாரி, சட்ட உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் (விஷேடம்), மொழிபெயர்ப்பாளர், தீயணைப்பு இயந்திர அலுவலர், பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் வருமான உத்தியோகத்தர் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படாமையினால் மாநகர சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்படுகின்றன.	இவ்விடயம் தொடர்பாக எம்மால் உள்ளூராட்சி ஆணையாளருக்கு பல தடவைகள் தெளிவு படுத்தப்பட்டும் தற்போது வரை இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	உரிய பதவியணியினரை நியமிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 360,159 ஆன கடன் நிலுவையினை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	உரிய நபர்களை மற்றும் பிணையாளிகளை அடையாளம் கண்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.	கடன் நிலுவையினை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	வாகன இயந்திரவியல் தொழிநுட்ப அலுவலருக்கான பதவி அனுமதிக்கப்பட்டும் இதுவரை நியமனம் செய்யப்படாததினால் சபையின் 14 ஓட முடியாத நிலையில் காணப்படுகின்ற வாகனங்களுக்கு விரைவாக திருத்தம் செய்வதற்கான சிபாரிசுகளினை பெறமுடியாதுள்ளது. மேலும் வாகனத் திருத்தங்களுக்கு தொடர்பற்ற கட்டிடத்துறை பொறியியலாளரினால் சிபாரிசு மேற்கொள்ளும் நடைமுறை பின்பற்றப்படுகின்றது.	வாகான இயந்திரவியல் தொழிநுட்ப அலுவலரை நியமிப்பதற்கு ஆவண செய்யுமாறு கிழக்கு மாகாண பிரதம செயலாளாரிடம் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	உரிய பதவியணியினரை நியமிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டில் கடையறை வாடகையாக ரூபா 23,967,812 நிலுவையாக காணப்பட்டிருந்தது. மேலும் அனுமதிக்கப்பட்ட வருமான பரிசோதகர் ஆளணி எண்ணிக்கை 09 ஆக காணப்பட்டிருந்த போதும் 3 உத்தியோகத்தர்கள் மாத்திரம் இதுவரை நியமிக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது.	ஆளணி கோரப்பட்டுள்ளது இணைக்கப்பட்டுள்ளது	அறவிட வேண்டிய வருமானங்களை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 15(1) உப பிரிவிற்கமைய நிதிக்கூற்றுக்களை அரசாங்கத்தின் ஒவ்வொரு நிதியாண்டும்	இனிவரும் காலங்களில் உரிய திகதிக்குள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும்.	தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் உரிய திகதியில் நிதிக்கூற்றுக்களை

முடிவடைந்த பின்னர் 03 மாதங்களுக்கு பிந்தாமல் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும், 2025 மே 08 ஆந் திகதியே மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.		சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**சிபாரிசு**
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவு பிரகாரம் உள்ளகக் கணக்காய்வின் மூலம் நிறுவன செயற்பாட்டு நடைமுறையை மேம்படுத்தல் மற்றும் செயலாற்றலை உயர்த்துவதற்காக பரிந்துரைகளை தயாரித்திருக்கவில்லை.	உள்ளகக் கண்காய்வு குழு ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	உள்ளகக் கணக்காய்வு செய்யப்பட்டு சபையின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் செயலாற்றலை உயர்த்துவதற்கும் பரிந்துரைகள் தயாரிக்கப்பட வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**சிபாரிசு**
அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணவும், அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அண்மிப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி நடவடிக்கைகளுக்காக சபையினால் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதியானது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்ளடக்கியதாகவே அமைகின்றது.	சுற்றறிக்கையின் பிரகாரம், குறிக்கோள்களை அடையக் கூடிய வகையில் குறிகாட்டிகளை உருவாக்குவதற்கு பாதீட்டில் நிதி ஒதுக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.